**05.02.2026 <u>அசல் வழக்கு எண்.107/2013</u> Starting Time : 11.45 a.m.**

**<u>வா.சா.1</u> திருமதி. மணிமேகலை க/பெ. அருண்.**

**<u>சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு, பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

**1**). நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலம் நான் சொல்லி தான் தயாரிக்கப்பட்டது என்றால் சரிதான். நான் என்ன படித்துள்ளேன் என்றால் ஐந்தாம் வகுப்பு வரை படித்துள்ளேன். படிக்க தெரியுமா என்றால் படிக்க தெரியும். என்ன வேலை செய்து வருகிறேன் என்றால் விவசாயம் செய்து வருகிறேன். என் தகப்பனார் தான் இந்த வழக்கை தாக்கல் செய்தார் என்றால் சரிதான். எதற்காக வழக்கு தாக்கல் செய்தார் என்றால் சொத்திற்காக வழக்கு தாக்கல் செய்தார், அவர் காலமான பிறகு நாங்கள் நடத்தி வருகிறோம்.

**2**). தாவா சொத்து எந்த எல்லையில் உள்ளது மேலானூர் எல்லையில் உள்ளது. பிரதிவாதி ஏழுமலை எந்த ஊரை சேர்ந்தவர் என்றால் குடிசைக்கரையை சேர்ந்தவர் ஆவார். நாங்கள் குடியிருக்கும் இடத்திற்கும் நிலத்திற்கும் இடையே எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 1 கிலோமீட்டர் தூரம் இருக்கும்.

**(சாட்சிக்கு உடல்நிலை சரியில்லாததால் வேறு ஒரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது).**

**Ending time : 11.51 a.m.**

Taken down by me in Open court read over to the witness in the presence of the Plaintiff/Defendant and admitted by him/her to be correct.

Sd/-C. Mahalakshmi,
District Munsif,
Vandavasi.